**<u>வணிக வரி மற்றும் பதிவுத் துறை</u>**

**<u>மானியக் கோரிக்கை எண் – 10</u> (வணிகவரிகள்)**

**<u>மானியக் கோரிக்கை எண் – 11</u> (முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு)**

**<u>அறிவிப்புகள் – 2015 – 2016</u>**

1. சென்னை வணிக வரிக் கோட்டங்களில் சென்ற ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்பினால் உருவாக்கப்பட்ட புதிய வரிவிதிப்பு வட்டங்களுக்கு, புதிய அலுவலகக் கட்டடங்கள் தேவைப்படுகின்றன. இதனைக் கருத்தில் கொண்டு 19 வணிகவரி அலுவலகங்கள் செயல்படும் வகையில், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம், நசரத்பேட்டையில் ரூ.5.34 கோடி செலவில் புதிய ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலக வளாகம் கட்டப்படும்.

2. தமிழ் நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006 நடைமுறையின் கீழ், பதிவுச் சான்று வேண்டி வணிகர்களிடம் இருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் சரி பார்க்கப்பட்டு, விண்ணப்பம் பெற்ற 30 தினங்களுக்குள் புதிய பதிவுச் சான்று வழங்கப்படுகிறது. இதனை எளிதாக்கும் முகமாக, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** விண்ணப்பம் பெறப்பட்ட 48 மணி நேரத்திற்குள் அதாவது இரண்டு வேலை நாட்களுக்குள் வணிகர்களுக்கு பதிவுச் சான்று வழங்கப்படும்.

**3.** சென்னையின் நான்கு வரிவிதிப்பு கோட்டங்களில் உள்ள 100 அதிக வரி செலுத்தும் வணிகர்களைக் கொண்ட "அதிக வரி செலுத்துவோர் பிரிவு (Large Taxpayer Unit)," இணை ஆணையர் தலைமையிலும், கோவை கோட்டத்தில் இரண்டு "விரைவு வழி வரிவிதிப்பு வட்டங்கள் (Fast Track Assessment Circles)" துணை ஆணையர்கள் தலைமையிலும் செயல்பட்டு வருகின்றன. பெரு வணிகர்கள் பல்வேறு வணிகவரித் துறை சம்பந்தப்பட்ட சேவைகளை சிரமம் இன்றி பெறுவதற்கு ஏதுவாக, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** வேலூர், சேலம், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய ஐந்து கோட்டங்களில் அதிக வரி செலுத்தும் 50 முதல் 75 வணிகர்களை உள்ளடக்கிய, துணை ஆணையரை வரிவிதிப்பு அலுவலராகக் கொண்ட "கோட்ட அதிக வரி செலுத்துவோர் பிரிவு (Divisional Large Taxpayer Unit)," ஏற்படுத்தப்படும். அத்துடன் கோவை கோட்டத்தில் இயங்கி வரும் இரண்டு "விரைவு வழி வரிவிதிப்பு வட்டங்கள் (Fast Track Assessment Circles)," "கோட்ட அதிக வரி செலுத்துவோர் பிரிவு (Divisional Large Taxpayer Unit)," என பெயர் மாற்றம் செய்யப்படும்.

4. துணை வணிகவரி அலுவலர்களின் வரி விதிப்பிற்கான உச்சவரம்பு, 2006–ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டம், 1956–ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டம் ஆகியவற்றில் வணிகர்களின் ஆண்டு மொத்த விற்பனை தொகை ரூபாய் எழுபத்தைந்து இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் என உள்ளது. அலுவலர்களிடையே சமச்சீரான பணி பகிர்மானத்திற்காக, இந்த உச்சவரம்பு **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** ரூபாய் ஒரு கோடியாக உயர்த்தப்படும்.

5. தமிழ் நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006, முதலாம் அட்டவணை, பகுதி–B, வரிசை எண்.67–ல் தொழிலக உள்ளீட்டுப் பொருட்கள் வரையறுக்கப்படாததால் வணிகர்கள் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். எனவே **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**, முதலீட்டுப் பொருட்கள் மற்றும் தொழிலக உள்ளீட்டுப் பொருட்கள் ஐயத்திற்கிடமின்றி பிற மாநிலங்களில் உள்ளவாறு வரையறுக்கப்பட்டு பட்டியலிடப்படும்.

6. வணிகவரித்துறையில் அதிக அளவில் வழக்குகள் நிலுவையில் உள்ளன. தேவையற்ற வழக்குகள் தொடுப்பதைத் தடுத்து, அதிக அளவில் வருவாய் சம்பந்தப்பட்ட இனங்கள் அல்லது சட்டச் சிக்கல் உள்ளடக்கிய இனங்களில் மட்டுமே வழக்கு தொடரவும் அல்லது மேல்முறையீடு செய்யவும் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**, வணிகவரித் துறைக்கென வரி வழக்குக் கொள்கை (Tax Litigation Policy) வரையறுக்கப்படும்.

7. வரி நடைமுறை தொடர்பாக தொழில் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு ஏற்படும் அன்றாடச் சிக்கல்களைக் களையும் பொருட்டு முக்கியமான இனங்கள் தொடர்பாக வணிக சங்கங்களுடன் கலந்தாலோசிக்க, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**, வணிகவரி ஆணையர் தலைமையில் ஒரு வரி செலுத்துவோர் மாநில ஆலோசனைக் குழு உருவாக்கப்படும்.

8. **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** மாநில மற்றும் கோட்ட அளவில், உரிய நேரத்தில் அதிக அளவில் வரி செலுத்தும் வணிகர்களை அங்கீகரித்துப் பெருமைப்படுத்தும் விதமாக ஒவ்வொரு வருடமும் நற்சான்றிதழ் வழங்கவும், மேலும், வரி நடைமுறைகள் மற்றும் விதிகள் தொடர்பாக சிறு வணிகர்களுக்குப் பயிற்சி அளிக்கும் வகையில், நேரடிப் பயிற்சி வகுப்புகள், வணிகவரி கையேடுகள், செய்தி ஊடகங்கள், சமூக ஊடகங்கள் மற்றும் வணிகவரித்துறை இணையதளம் மூலம் சென்றடைவதற்கான **வரி செலுத்துவோர் விழிப்புணர்வு மற்றும் தகவல் தொடர்பு திட்டத்தை அறிமுகப்படுத்த** ரூபாய் 1.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

9. **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** வரி ஏய்ப்பினை கண்டுபிடிக்க ஏற்படுத்தப்பட்டுள்ள வணிகவரித்துறையின் வணிக நுண்ணறிவு பிரிவுக்கு (Business Intelligence Unit) மேம்பட்ட வணிக நுண்ணறிவு உத்திகளைக் கையாளவும், வணிக நுண்ணறிவு பிரிவு (Business Intelligence Unit) மற்றும் செயலாக்க அலுவலர்களை (Enforcement Officials) இணைய வணிக உத்தி (e-commerce), மின்னணு தடயவியல் (Cyber Forensics) மற்றும் தடயவியல் கணக்கீடு (Forensics Accounting) ஆகியவற்றை பயிற்றுவிக்கவும் ஒரு தகுதிபெற்ற ஆலோசகர் நியமிக்கப்படுவார். இதற்காக ரூபாய் 50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

**10.** கற்றல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவை முன்னேற்றத்தின் மையக்கூறாகும். எனவே அனைத்து அலுவலர்களும் குறைந்தது ஆண்டுக்கு 10 நாட்களாவது பயிற்சி பெற வேண்டும் என்ற சீரிய நோக்கத்தின் அடிப்படையில் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பணித்தரத்தை மேம்படுத்தும் விதமாக பயிற்சிகள் வழங்கிட வணிகவரி பணியாளர் பயிற்சி நிலையத்திற்கு தற்போது வழங்கப்படும் வருடாந்திர பயிற்சி மானியத் தொகையான ரூபாய் 17 லட்சம் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** ரூபாய் ஒரு கோடியாக உயர்த்தப்படும்.

**11.** **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** வரிவிதிப்பு அலுவலகங்களுக்கு வருகை தரும் வணிகர்களின் வசதிக்காக இருக்கைகள், அறிவிப்பு பலகைகள் மற்றும் பணியாளர்களுக்கு கணினிமயமாக்குதலுக்குப் பொருந்தும் வகையிலான இருக்கை வசதிகள், முக்கிய ஆவணங்கள் மற்றும் கோப்புகளின் பாதுகாப்பு போன்ற உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், முழுமையான கணினிமயமாக்கல் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட விலை உயர்ந்த தகவல் தொழில் நுட்ப சாதனங்களைப் பாதுகாக்கும் வகையில் வணிகவரி அலுவலகக் கட்டடங்களை பழுதுபார்ப்பதற்கும், பராமரிப்பதற்கும், வணிகவரி அலுவலகங்களில் தரமான குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தவும் ரூபாய் 5 கோடி வழங்கப்படும்.

**12. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி** வணிகர்கள், தமிழ்நாடு வணிகர் நல வாரியத்தின் உறுப்பினர் ஆக விருப்பம் இருப்பின், பதிவுச் சான்று வழங்கப்படும் அன்றே வணிகர் நல வாரியத்தில் உறுப்பினராக்கப்படுவர். மேலும், இணையதள மென்பொருளைப் பயன்படுத்தி, வணிகர் நல வாரியத்தில் உறுப்பினர் சேர்க்கைப் பணியினை மேற்கொள்ள பதிவு அலுவலர்களுக்கு அதிகாரமளிக்கப்படும் .

**13.** வணிகவரித் துறையின் செயல்பாடுகள் தடையில்லாமல் நடைபெறுவதற்கும் வரி வசூல் சிறப்பாக நடைபெறுவதற்கும், **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி**, ரூ.1.08 கோடி செலவில் பழைய வாகனங்களுக்கு பதிலாக 2 சிற்றுந்துகள் மற்றும் 12 ஈப்புகள் என மொத்தம் 14 புதிய வாகனங்கள் வாங்கப்படும்.

14. பதிவுத் துறையின் அனைத்து அலுவலகங்களும் சொந்த கட்டடங்களில் இயங்க வேண்டும் என்பது அரசின் இலக்காகும். இதனைச் செயல்படுத்தும் முகமாக **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** நடப்பு நிதியாண்டில் இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி மற்றும் கடலூர் மாவட்டம் புவனகிரி ஆகிய இடங்களில் உள்ள சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு ரூ.1.10 கோடி செலவில் அரசு கட்டடம் கட்டப்படும்.

**15.** குடும்ப உறுப்பினர்கள் அல்லாதவர்களிடையேயான கூட்டுப் பங்காண்மை கலைப்பு, குடும்ப உறுப்பினர்கள் அல்லாத கூட்டுடைமைதாரர் அல்லது கூட்டுப் பங்குதாரருக்கு உரிமையை விட்டுக் கொடுக்கும் விடுதலை, குடும்ப உறுப்பினர் அல்லாதவருக்கு எழுதிக் கொடுக்கும் ஏற்பாடு (Settlement) போன்ற ஆவணங்களுக்கு அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் சந்தை மதிப்பில் 8 சதவிகிதம் முத்திரைத் தீர்வையாக தற்போது வசூலிக்கப்பட்டு வருகிறது. **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** இனி,

8 சதவிகிதம் முத்திரைத் தீர்வை விதிக்கப்படும் அனைத்து வகையான ஆவணங்களுக்கும், அவற்றிற்கான முத்திரைத் தீர்வை 7 சதவிகிதமாகக் குறைக்கப்படும்.

16. பதிவுத் துறையில், துறை சார்ந்த முக்கிய விவரப் பகிர்வுகளுக்கு ஏதுவாக, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி,** பதிவுத் துறைத் தலைவர் முதல் சார்பதிவாளர் நிலை வரையிலான அனைத்து அலுவலர்களுக்கும் 900 அலைபேசிகளும் மற்றும் குறு வட்ட இணைப்பு (Closed Unit Group – CUG) திட்டத்தின்படி அலைபேசி எண்களும் வழங்கப்படும். இத்திட்டத்திற்காக 900 அலைபேசிகள் வாங்குவதற்கு தொடராச் செலவினமாக ரூ.25.50 இலட்சமும், குறு வட்ட இணைப்புகளுக்கான மாதாந்திர வாடகையாக தொடர் செலவினமாக ரூ.1.52 இலட்சமும் ஒதுக்கப்படும்.